**100 % வாக்களிக்க உறுதி செய்வோம்!**
**ENSURE 100% VOTING!**

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 25** **நாள்: 16.04.2019**

**சென்னை மாவட்டத்தில் மூன்று பாராளுமன்ற தொகுதி மற்றும் பெரம்பூர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு தொடர்பான ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஏ.கே.விஸ்வநாதன், இ.கா.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

பாராளுமன்ற பொதுத்தேர்தல்–2019யை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் மூன்று பாராளுமன்ற தொகுதி மற்றும் பெரம்பூர் சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் வாக்குப்பதிவு தொடர்பான ஏற்பாடுகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சென்னை பெருநகர காவல் ஆணையாளர் திரு.ஏ.கே.விஸ்வநாதன், இ.கா.ப., அவர்கள் தலைமையிலும், மத்திய பொதுப்பார்வையாளர்கள் மற்றும் காவல் பார்வையாளர்கள் முன்னிலையிலும் இன்று (16.04.2019) ரிப்பன் மாளிகையில் உள்ள அம்மா மாளிகையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வாக்குப்பதிவிற்காக வாக்குப்பதிவு மையங்களில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடு பணிகள் குறித்தும், சட்டம் ஒழுங்கு தொடர்பாக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. மேலும், ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் பொதுமக்கள் சிரமமின்றி வாக்களிக்க ஏதுவாக அமைக்கப்பட்டுள்ள குடிநீர் வசதி, சாமியானா பந்தல், இருக்கை வசதி, கழிவறை மற்றும் மாற்றுத்திறனாளிகள், முதியவர்கள் வாக்களிக்க செய்யப்பட்டுள்ள சாய்வுதளம் வசதிகள் குறித்தும், பதற்றமான மற்றும் மிகவும் பதற்றமான வாக்குச்சாவடி மையங்களில் மேற்கொள்ளப்பட உள்ள பாதுகாப்பு வசதிகள் குறித்தும், வாக்குச்சாவடி மையங்களில் வெப் கேமரா மூலம் நேரடியாக கண்காணிக்க செய்யப்பட்டுள்ள ஏற்பாடுகள் குறித்தும், முழுவதும் பெண்களே பணிபுரியும் வகையில் மகளிர் வாக்குப்பதிவு மையங்கள் அமைப்பது குறித்தும், மாதிரி வாக்குப்பதிவு மையங்கள் அமைப்பது குறித்தும், வாக்குப்பதிவிற்கு தேவையான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், வாக்காளர் சரிபார்ப்பு காகித தணிக்கை இயந்திரங்கள் (VVPAT) குறித்தும் விவாதிக்கப்பட்டது.

பின்னர் மாவட்ட தேர்தல் அலுவலர்/ஆணையாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., அவர்கள் பத்திரிகையாளர்களிடம் தெரிவித்ததாவது: சென்னை மாவட்டத்தில் மொத்தம் 38,66,066 வாக்காளர்கள் உள்ளனர். இவ்வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கும் பணிகள் 12.04.2019 முதல் நடைபெற்று வருகிறது. 15.04.2019 வரை மொத்த வாக்காளர்களில் 21,35,756 வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள வாக்காளர்களுக்கு பூத் சிலிப் வழங்கும் பணி இன்று மாலைக்குள் வழங்கப்படும்.

இன்று (16.04.2019) மாலை 6.00 மணியுடன் தேர்தல் பிரச்சாரங்கள் முடிவடைவதால் வெளியூரிலிருந்து பிரச்சாரத்திற்கு வந்தவர்கள் உடனடியாக சென்னை மாவட்டத்திலிருந்து வெளியேற வேண்டும். மேலும், இன்று (16.04.2019) மாலை 6 மணி முதல் வாக்குப்பதிவு நிறைவடையும் 18.04.2019 அன்று மாலை 6 மணி வரை மின்னணு ஊடகங்களில் சமூக வலைத்தளங்களில் தேர்தல் விளம்பரம் செய்ய தடை விதிக்கப்பட்டுள்ளது.

FST, VST குழுக்களால் 15.04.2019 அன்று வரை சந்தேகத்திற்கிடமான வகையில் தகுந்த ஆவணமின்றி கொண்டு செல்லப்பட்ட பணம் ரொக்கமாக ரூபாய் 6.60 கோடி (ரூ.6,59,87,670/–) பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதில் தகுந்த ஆவணங்களுடன் மேல்முறையீடு செய்யப்பட்ட ரூ.62,93,334/– ரொக்கம் உரிமையாளர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், தகுந்த ஆவணமின்றி கொண்டு செல்லப்பட்ட சுமார் 142kg தங்கம் பறிமுதல் செய்யப்பட்டு, பின்னர் தகுந்த ஆவணங்களுடன் மேல்முறையீடு செய்யப்பட்ட சுமார் 128kg உரிமையாளர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டுள்ளது.

1983 வாக்குச்சாவடி மையங்களில் வெப் கேமரா மூலம் நேரடியாக கண்காணிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வாக்குச்சாவடி மையங்களில் பணிபுரியவுள்ள அலுவலர்களில் 6,300 நபர்கள் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட தொகுதிகளில் வாக்களிக்க உள்ளனர். இவற்றில் 4,313 நபர்களுக்கு தபால் வாக்குகள் வழங்கப்பட்டு 2560 நபர்கள் தங்களுடைய தபால் வாக்குகளை பதிவு செய்துள்ளனர். மேலும், 1,764 நபர்களுக்கு வாக்களிக்க ஏதுவாக தேர்தல் பணி சான்றிதழ் (EDC) வழங்கப்பட்டுள்ளது.

அரசு கட்டடங்கள் மற்றும் பொது இடங்களில் சுவரொட்டிகள், சுவர் விளம்பரங்கள், பேனர்கள் மற்றும் இதர விளம்பரங்கள் என மொத்தம் 13,232 விளம்பரங்களும், தனியார் இடங்களில் 12,503 விளம்பரங்களும் அழிக்கப்பட்டு அப்புறப்படுத்தப்பட்டுள்ளன. சுவரொட்டிகள், சுவர் விளம்பரங்கள், பேனர்கள் மற்றும் இதர விளம்பரங்கள் வைக்கப்பட்டது தொடர்பாக 260 புகார்கள் பதியப்பட்டு 244 புகார்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது. மேலும், தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறியதாக 227 புகார்கள் பெறப்பட்டு 178 புகார்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதியப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

தொடர்ந்து, சென்னை மாநகர காவல் ஆணையாளர் திரு.ஏ.கே.விஸ்வநாதன், இ.கா.ப., அவர்கள் தெரிவித்ததாவது: சென்னை மாவட்டத்தில் 18.04.2019 வாக்குப்பதிவு தினத்தன்று சட்டம் ஒழுங்கை பாதுகாக்க விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சென்னை மாநகர காவல்துறையின் சார்பாக 15,000 காவலர்கள் இப்பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், 5 கம்பெனி மத்திய தொழில் பாதுகாப்பு படையினரும், இரண்டு கம்பெனி ஆந்திர மாநில காவல்துறையினரும், இரண்டு

கம்பெனி தமிழ்நாடு சிறப்பு காவல் படையினரும் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், கூடுதலாக தேர்தல் பாதுகாப்பு பணிகளில் ஊர்காவல் படை, ஒய்வுபெற்ற காவலர்கள் மற்றும் முன்னாள் இராணுப்படை வீரர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். வாக்குச்சாவடியில் தேர்தல் அமைதியாக நடைபெறும் வகையில் காவல்துறை மற்றும் துணை இராணுவத்தினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மண்டல அளவில் நடமாடும் வாகனங்கள் மூலம் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இன்று மாலை 6.00 மணியுடன் தேர்தல் பிரச்சாரம் முடிவடைவதால் வெளிமாவட்டங்களிலிருந்து தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் இன்று மாலை 6.00 மணிக்கு பிறகு உடனடியாக வெளியேற வேண்டும் என தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மத்திய பொதுப் பார்வையாளர்கள் டாக்டர் ஷாம்லா இக்பால், இ.ஆ.ப., திரு.சுதிர் ராஜ்பால், இ.ஆ.ப., திரு.ககன்தீப் சிங் ப்ரார், இ.ஆ.ப., திரு.ரஜித் புன்ஹானி, இ.ஆ.ப., மத்திய காவல் பார்வையாளர்கள் திரு.ரஞ்சன்குமார் சர்மா, இ.கா.ப., திரு.உதய பாஸ்கர் பில்லா, இ.கா.ப., கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/சென்னை மாவட்ட ஆட்சியர் திரு.ஏ,சண்முக சுந்தரம், இ.ஆ.ப., கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/ இணை ஆணையாளர் (வ (ம) நி) திருமதி ஆர்.லலிதா, இ.ஆ.ப., சென்னை மாநகர காவல்துறை கூடுதல் ஆணையாளர்கள் திரு.ஆர்.தினகரன், இ.கா.ப., மற்றும் திரு.மகேஷ்குமார் அகர்வால், இ.கா.ப., தேர்தல் நடத்தும் அலுவலர்கள் திரு.பி.என்.ஸ்ரீதர், இ.ஆ.ப., திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., டாக்டர் ஆல்பி ஜான் வர்கீஷ், இ.ஆ.ப., பெரம்பூர் சட்டமன்ற தேர்தல் நடத்தும் அலுவலர் திரு.எஸ்.கருணாகரன், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் / துணை ஆணையாளர்கள் திரு.எம்.கோவிந்த ராவ், இ.ஆ.ப., திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., திரு.பி.குமாரவேல் பாண்டியன், இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திரு.ஏ.பெருமாள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**